**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படுகின்ற ஓட்ட நிலையில் காணப்படுகின்ற கூட்டுப்பெறுமதி ரூபா 4,632,514 ஆன 03 வாகனங்கள் வரலாற்று கிரயத்தில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், சொத்துக்களில் ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தப்பட்டு சரியான இழிவுப் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை மதிப்பீடு செய்யும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இழிவுப் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுகளின் போது இனங்காணப்படாத ரூபா 25,925,739 ஆன கடன் மீதி மீளாய்வாண்டின் போது நீண்ட கால கடனாக இனங்காணப்பட்டிருந்த போதும் தேவையான அறவிட முடியாக்கடன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய கடன்பட்டோர் மீதியின் கீழ் காண்பிக்கப்பட்ட தனித்தனியாக இனங்காண முடியாத இந்த ரூபா 25.9 மில்லியன் ஆன மீதி இலாபத்தில் இருந்து குறைத்து காட்டுவதற்கு அந்த மீதியை பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் உரித்தில்லாதிருந்ததுடன், அந்த மீதியை தனித்தனியாக இனங்காண முடியாமையால் கடன்பட்டோர் மீதி கணக்கில் இருந்து குறைத்து நீண்டகால பெறவேண்டிய கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. | அறவீடுகள் நிச்சியமற்ற மீதிகளுக்காக போதியளவான ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 03 காணிகளுக்குரிய 6340 ஏக்கர் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட | நிதி நிலைமை போதியளவாக இல்லாமையின் காரணமாக அருவக்காலு | சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | போதும், மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில வருடங்களாக இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அந்த சொத்துக்களை மதிப்பீடு செய்தல் தொடர்பாக தேவையான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுண்ணாம்புக்கல் பழிங்குடன் உள்ள காணியை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்ததுடன், காலியில் அமைந்துள்ள காணியை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே எதிர்காலத்தில் காணி வகுப்பையும் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். | வேண்டும். |
| (இ) | 25,750 கன மீற்றர் ஆன சுண்ணாம்புக்கல் இருப்பு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், பெறுமதி கணிப்பிடப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இந்த சுண்ணாம்புக்கல் இருப்பு பௌதீக ரீதியில் அளவிடப்படாதிருந்ததுடன், எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுண்ணாம்புக்கல் இருப்பின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தால் 1981 ஆம் ஆண்டின் போது லங்கா சீமெந்துக் கம்பனியில் ரூபா 10 பெறுமதியுடைய பங்குகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,083,618,910 முதலீடு செய்யப்பட்டிருந்தது, அந்த முதலீடுகளின் சந்தை பெறுமதி வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு மேற்கொள்ளாமல் 2016 ஆம் ஆண்டின் போது பங்கொன்றின் சந்தை விலை பெறுமதி ரூபா 5.70 ஆக ரூபா 617,662,779 ஆன முதலீட்டு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | லங்கா சீமெந்து கம்பனியை கலைக்கும் நடவடிக்கைகள் ஈடுபடுவதுடன், 2016 ஆம் ஆண்டின் பின்னர் லங்கா சீமெந்து கம்பனியினால் கூட்டுத்தாபனத்திற்கு கணக்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை . அதனால் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | முதலீடுகளின் சந்தை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | கூட்டுத்தாபனத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்ட 03 சொத்து வகைகளுக்குரிய கணக்கீடு செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி | தகவல்களை கண்டறிய முடியாதுள்ள சொத்துக்களின் பெறுமதியே வேறுபாடுகளுக்கான காரணமாகும். | சொத்துக்கள் பதிவேட்டை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 10,973,080 ஆக இருந்த போதிலும், நிலையான சொத்து பதிவேட்டின் மூலம் அந்த சொத்துக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 6,719,780 ஆனமையால் ரூபா 4,253,300 வேறுபாடு காணப்பட்டது. | | |
| (ஊ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாக காண்பிக்க வேண்டிய ஒரு வருடத்திற்கு குறைந்த காலம் தீர்த்து வைக்கப்படாத பொறுப்பே காண்பிக்க வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் சந்தை மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் ரூபா 42,074,764 மீதியில் ரூபா 25,250,966 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து கொண்டு வரப்படுகின்ற கடன் மீதியில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரி தொகை ரூபா 14,374,689 மீதி தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கடன்கொடுத்தோர் மீதியை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சந்தை மற்றும் ஏனைய பெறவேண்டிய ரூபா 181,876,862 ஆன மீதியில் ரூபா 27,699,106 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படுகின்ற மீதியாகும். | இது தொடர்பாக எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 756 | ரூபா 238,255 பெறுமதியான இறுதி இருப்பு மற்றும் ரூபா 808,769,061 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இறுதி இருப்பு தொடர்பாக எதிர்காலத்தில் பௌதீக உறுதிப்படுத்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டின பொருள் மெய்மையாய்வு அறிக்கை தயாரிக்கப்படுவதுடன், அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 60,802,048 இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 44,642,491 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 16,159,557 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நிதிச் செலவினம் ரூபா 6,628,629 இனால் அதிகரித்த போதிலும், கிடைத்த குறுங்கால வைப்பு முதலீட்டின் அடிப்படையில் கிடைத்த வட்டி வருமானம் ரூபா 19,608,587 இனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காங்கேசந்துறையில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்குரிய 02 எண்ணெய் தாங்கள் மற்றும் குழாய் முறைமை என்பன இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன களஞ்சிய இறங்குதுறை அரச கம்பனிக்கு எழுத்துமூல உடன்படிக்கையில் | இந்த எண்ணெய் தாங்கிகளுக்கு உரியதாக கிடைக்க வேண்டிய வாடகை, கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த போதிலும் காணியின் உரித்தை விடுவிக்காமையின் | இந்த நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திடாமல் வழங்கப்பட்டிருந்ததுடன், விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் 2015 திசெம்பர் 22 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 201,360,000 கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டியதாக இருந்தமை மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், அந்த தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | காரணமாக பணம் செலுத்துதல் வசதியீனமாக இருந்தது. | |
| (ஆ) | ரூபா 1,200,000 பெறுமதியான காலி உணவட்டுன கெஸ்பேபான காணி சுனமியால் பாதிப்படைந்த 60 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஹபராதுவ பிரதேச செயலாளரால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக எந்தவொரு தொகையையும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | உரிய இழப்பீட்டு பணத்தை பெற்றுக் கொள்வதற்காக 2022 நவம்பர் மாதம் நியமிக்கப்பட்ட புதிய தலைவரினால் முன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு கையளிக்கப்பட்டிருந்ததுடன், காணியின் உரித்தை உறுதிப்படுத்தி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மற்றும் காணியை மதிப்பீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனம் மற்றும் புத்தளம் சீமெந்து கம்பனி லிமிடட் அதாவது தற்போதைய சியெம் சிட்டி இருந்து சீமெந்து லங்கா லிமிடட் இற்கிடையே 1996 ஆகஸ்ட் 23 ஆம் திகதி கைச்சத்திடப்பட்ட இலக்கம் 495 என்ற உடன்படிக்கை மூலம் அருவக்காலு சுண்ணாம்புக்கல் உடனான காணி வருடாந்தம் நிலையான வாடகை அடிப்படையில் 50 வருடங்களுக்கு வாடகைக்கு | இது தொடர்பாக வரிசை அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் இடம் பெற்ற நிதி மேசடிகள் தொடர்பாக 2020.06.25 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் தொடர்பில் | உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன் சட்டமா அதிபர் மற்றும் வரிசை அமைச்சின் ஆலோசனை பெற வேண்டியிருந்ததுடன், அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன், 2019 நவம்பர் 07 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலக்கம் 268 என்ற மேலதிக வாடகை உடன்படிக்கை மூலம் ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு தடவை 12 சதவீத வாடகை அதிகரித்தல் சதவீதத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு முதல் வாடகை வருமானம் அ.டொலர் 319,118 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், 1993 முதல் 2018 வரை முதலாவது உடன்படிக்கையில் இழக்கப்பட்ட வருடாந்த வாடகையை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக தீர்மானத்தை எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. மேலும், மேலதிக வாடகை உடன்படிக்கைக்காக சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கண்டறியப்படும். | |
| (ஈ) | பெறுமதி ரூபா 750,000 ஆன புகையிரத எஞ்சின் ஒன்று சில வருடங்கள் முதல் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சொத்தாக காண்பிக்கப்பட்ட போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், விளைவற்று காணப்படுகின்ற சொத்து தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த புகையிரத எஞ்சினை விற்கும் நோக்கில் இது வரையில் நிறுவனத்தால் மாற்றப்படாதிருந்தமையினால் நிறுவனத்தின் கணக்கீட்டு நியம இலக்கம் 05 இன் 09 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த சொத்துக்களை விற்பனை செய்வதற்காக சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1957 இன் 49 ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றோம். | கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கத்தை |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தூரநோக்கு இலங்கையின் சீமெந்து கைத்தொழிலின் அபிவிருத்திக்காக வழிகாட்டுதல் மற்றும் தலைமைத்துவத்தை வழங்குவதாக இருந்ததுடன், செயற்பணியாக நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தரமான சீமெந்து மற்றும் ஏனைய சீமெந்து சார்ந்த உற்பத்திகளை போதியளவான பிரகாரம் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் தற்போது வரையில் கூட்டுத்தாபனத்தால் சீமெந்து மற்றும் சீமெந்து சார்ந்த எந்தவொரு உற்பத்தியும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அருவக்காலு சுண்ணாம்புக்கல் படிவினை வாடகைக்கு வழங்குவதால் பெறப்பட்ட ரூபா 64,062,938 தொகை மற்றும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணி வாகன தரிப்பிடத்திற்காக வாடகைக்கு வழங்கியதால் பெறப்பட்ட ரூபா 4,753,438 ஆன வாடகை வருமானம் மாத்திரம் 2022 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமான மூலமாக இருந்தது. | | நிறைவேற்றும் வகையில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இயற்கை வளங்களில் ஆகக் கூடிய பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | உயர் பெறுமதியுடைய நிறை கூடிய கனிய பொருட்களுடன் அருவக்காலு சுண்ணாம்புக்கல் படிவுடன் உள்ள காணியில் ஆகக் கூடிய மேல் மண் படை மற்றும் அகழ்விற்காக இலங்கை கனிப் பொருள் கம்பனியுடன் ஒன்றிணைந்த | லங்கா கனிப்பொருள் கம்பனி இந்த செயற்திட்டத்தில் இணைக்கப்படுதல் நிராகரிக்கப்பட்டமையால் இலுக்கா இன்டர்நெஷனல் நிறுவனம் இந்த செயற்திட்டத்திற்காக அனுமதி கோரியிருந்த போதிலும், அவர்கள் | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான இயற்கை வளங்களில் இருந்து ஆகக் கூடிய பயனை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டமொன்று 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்பபட்ட போதிலும், அந்த செயற்திட்டத்திற்காக தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும், உரிய தரப்பினருடன் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு எந்தவொரு தொகையும் செலுத்தாமல் நிராகரித்தமையினால் அவர்களுடன் இந்த செயற்திட்டத்தை நடாத்திச் செல்வதற்காக கூட்டுத்தாபனத்தாபனம் நிராகரித்திருந்ததுடன், இராஜாங்க அமைச்சரின் ஆலோசனையின் படி 2023 ஆம் ஆண்டின் போது இந்த செயற்திட்டம் ஆசா மினரல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த கனிப்பொருள் அகழப்படுகின்ற நிலத்தில் உள்ள நவீன வசதிகளை உடைய ஆய்வு கூடம் மற்றும் பரிசோதனை கூடங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 பெப்ரவரி 16 ஆம் திகதிய அமப/21/0175/320/ 004 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் காங்கேசந்துறையில் அமைந்துள்ள தொழிற்சாலையில் உள்ள பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களை அகற்றி தொழிற்சாலை கட்டிடத்தை சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கு இணையாக 2022 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தொழிற்சாலை வளவில் அமைந்துள்ள கட்டிடங்களின் நிலைமை தொடர்பான அறிக்கையொன்றை தயாரித்தல் கட்டிடத்தில் உள்ள இருப்புகளின் அளவை கணிப்பிட்டு அறிக்கை தயாரித்தல், கட்டிடத்தில் வளர்ந்துள்ள புதர்களை அகற்றி | 2022.02.14 ஆம் திகதி உரிய அறிக்கை அமைச்சுக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் 2022 ஆகஸ்ட் மாதத்தில் அரச நிதி திணைக்களத்தால் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு கேள்விச் சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டிருந்த போதும் தொழிற்சாலை வளவில் சுத்திகரிக்கும் நடவடிக்கைகள் கைத்தொழில் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களை ஆக்கபூர்வமான முதலீட்டிற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரந்துள்ள இரும்புகளை குவித்தல், கணிசமான இயந்திர உபகரணங்கள் தொழிற்சாலையின் வளவில் கழற்றி அகற்றப்பட்டமை மற்றும் துண்டுகளாக உள்ள கட்டிடங்களை அகற்றுதல் போன்ற பணிகளை உள்ளடக்கியிருந்த போதிலும், அந்த செயற்பாடுகள் எதுவும் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 89.07 பேர்ச் ஆன கொள்ளுப்பிட்டி காணி 2008 ஆம் ஆண்டின் போது இலங்கை வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன் தொகை 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 97,700,000 இற்கு மீள் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 48,700,000 ஆகும். இந்த கடன் தொகைக்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 12,140,403 வட்டிப்பணம் செலுத்தப்பட்ட போதும், அந்த காணியை வாடகைக்கு வழங்கியதால் ஆண்டின் போது கிடைத்த வாடகை வருமானம் ரூபா 4,753,438 மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் ரூபா 735 மில்லியன் பெறுமதியை விட கூடிய வணிக ரீதியான பெறுமதியுடைய இந்த காணியை ஆக்கபூர்வமான முதலீடொன்றுக்காக ஈடுபடுத்துவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | இந்த காணி உயர் வணிக பெறுமதியுடைய காணியாக இருந்ததுடன், நானாவித முதலீட்டுகளில் ஆக்கபூர்வமான செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், பொருத்தமான முதலீட்டாளரை கண்டறிவதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், தற்போது ஆரம்ப சாத்திய வள அறிக்கை தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆதனங்களை ஆக்கபூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |